வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2463/ஆ2/2024 நாள்:09.09.2024

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிகல்வி–வேலூர் மாவட்டம்–2024–2025 ஆம் கல்வியாண்டு– மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மாவட்ட அளவிலான அனைத்து வகை விளையாட்டு போட்டிகள்– போட்டிகளுக்காக உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களை பணி விடுவிப்பு செய்ய தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்தல்–சார்பு. |
| பார்வை: | 1. மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.A1/380/2024 நாள்:07.09.2024<br>2. வேலூர் மாவட்டம் முதன்மை கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2463/ஆ2/2024 நாள்: 06.09.2024. |

---------

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி அனைத்து வகையான பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வரும் 10.09.2024 முதல் 26.09.2024 வரை நடைபெற உள்ள பல்வேறு விளையாட்டுப் போட்டிகளுக்கு இணைப்பில் காணும் அட்டவணையில் உள்ளபடி அவரவருக்கு ஒதுக்கீடு செய்த நாட்களில் சார்ந்த உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களை பணி விடுவிப்பு செய்ய அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு :

1.அவரவருக்கு ஒதுக்கீடு செய்த நாட்களில் சரிவர காலை 07:30 மணிக்கு மாவட்ட விளையாட்டு அரங்கில் கூடும்படி அறிவுறுத்தப்படுகிறது.

2. நடுவர்கள் அவர்களுடைய சீருடையில் வரவேண்டும்.

3. பட்டியலில் உள்ள உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் இயக்குநர்கள் எவ்வித தொய்வுமின்றி பணி செய்ய வேண்டும்.

4.மிலாடி நபி அரசு விடுமுறைக்கு ஏற்ப 17.09.2024 அன்று நடைபெற உள்ள போட்டிகள் 16.09.2024 அன்று மாற்றி நடைபெறவுள்ளன. (விடுமுறைக்கு ஏற்ப மாற்றத்திற்கு உட்பட்டது)

இணைப்பு:

1.பெயர் பட்டியல்–03படிவங்கள்

2.மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளின் அட்டவணை

//ஒம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்
அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்

நகல்
1.மாவட்ட கல்வி அலுவலர்
(தொடக்கக் கல்வி /இடைநிலைக் கல்வி/ தனியார் பள்ளிகள்)
மாவட்ட கல்வி அலுவலகம்
வேலூர்.
2.மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர்
வேலூர்.